1994 மார்ச் 19]

(ஆ) ஆம் எனில், சொந்தக் கட்டிடத்தில் இயங்க அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 11–05

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி (கதர்த்துறை அமைச்சர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியுள்ளதை அரசு நன்கு அறியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ள தஞ்சை மாவட்டம், கோவிந்தபுரத்தில் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் தற்பொழுது கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கதர் பட்டு உற்பத்திப் பிரிவில் உபகிளை இயங்கி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிக்கைகள் அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கே. முனிவெங்கடப்பன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக 1993–94 ஆம் ஆண்டிற்கான குழுவின் நூற்று நாற்பத்தெட்டு முதல் நூற்று ஐம்பத்திரெண்டு வரையிலான (பத்தாவது சட்டமன்றப் பேரவை) ஐந்து அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

3. தகவல் கோரல்.

உறுப்பினர் கொடுத்த அறிவிக்கை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி (குறுக்கீடுகள்) திரு. விசுவநாதன், நீங்கள் எதுவும் என்னிடத்